Registered as a Newspaper

ஐப்பானிய
'அய்மன்தே'
காப்பு
உலகமெங்கும் பிரசித்திபெற்ற
கவர்ச்சிகரமான காப்பு
ஐப்பானிய சுகாதார அமைச்சினுல்
அங்கீகரிக்கப்பட்டது.
விலை: ரூபா 146
General Trades
237, Power House Road,
JAFFNA.
T'Phone: 22834

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ஐப்பானிய
'அய்மன்தே'
காப்பு
உடம்பிலுள்ள நோவு, நாரிப் பிடிப்பு, இடுப்புவலி, மூட்டுவலி தசைப்பிடிப்பு முதலிய வியாதிகளுக்கு நிவாரணி
கிடைக்குமிடம்:
ஜெனரல் ற்ரேட்ஸ்
237, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22834

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன வூ மாசி மீ 14 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 16 (26-02-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:86

# மார்க்கோஸ் தப்பி ஓட்டம்

## அமெரிக்காவுக்கு பயணம் அக்கியுனே ஜனதிபதி

மணிலா, பெப்.25

பிலிப்பீன்ஸ் ஜனதிபதியாக 20 வருடங்கள் பதவி வகித்த பேர்ட்டினனட் மார்க்கோஸ் இன்று (செவ்வாய்க் கிழமை) நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். அவர் அமெரிக்கா சென்றதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன

எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த திருமதி கொரா சொன் அக்கியுனே பிலிப்பீன்ஸின் புதிய ஜனதிபதி யானர்.

திரு மார்க்கோஸ், பதவியிலிருந்து ராஜினமாச் செய்துவிட்டார் என்றும் திருமதி அக்கியுனேவின் அரசாங்கத்தை அமெரிக்கா அங்கீகரித்து விட்டதாகவும் வெளியுறவு அமைச்சர் திரு. ஜோர்ஜ் புஷ் வாஷிங்டனில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

திரு. மார்க்கோஸும் திருமதி அக்கியுனேவும் இன்று காலையில் வெவ் (4 ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத்தில் மீண்டும் மோதல்

## பொலீஸ் சுட்டு குழந்தை பலி

கொழும்பு, பெப். 26

தலவாக்கலையில் மீண்டும் மோதல். அதைத் தொடர்ந்து பதற்ற நிலை.

பொலீஸார் சுட்டதில் மூன்று வயதுக் குழந்தை ஒன்று மரணமானது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தலவாக்கலையில் சுமார் 5,000 தமிழ்த் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

இதைத் தொடர்ந்து மலையகத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

தலவாக்கலைத் தோட்டம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மலையகத் தமிழர் சிலர் கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்காக ஆயுதந் தாங்கிய பொலீஸார் அங்கு சென்றிருந்தனர்.

பொலீஸாரைக் கண்டதும், இளைஞர் ஒருவர் தப்பி ஓடினராம். அவரைத் துரத்திப்பிடிக்க முயற்சித்தனராம். அப்போது பொலீஸார் மீது கற்கள் வீசப்பட்டனவாம்.

இதைத் தொடர்ந்து பொலீஸார் துப்பாக்கிப் (4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னர் நகரில் நிலக்கண்ணி

## இராணுவத்தினர் 11 பேர் பலியானதாக புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப், 26

நேற்றுக் காலை மன்னர் நகரில் நடந்த நிலக்கண்ணி வெடியில் ஆயுதப் படையினரின் இரண்டு வாகனங்கள் சிக்கி முற்றாக சேதம் அடைந்தன.

இந்த தாக்குதலில் 11 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் அறிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக இடம் பெற்ற மோட்டோ ஷெல், துப்பாக்கிப் பிரயோகத்தில் பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டனர். 23 பேர் படுகாயமடைந்தனர்.

மன்னர் கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் இரவு கூட்டுப்பாதுகாப்பு கடமையை முடித்துக் கொண்டு தள்ளாடி முகாமுக்கு திரும்பிக் கொண்டிருந்த ஆயுதப்படையினரே நிலக்கண்ணி வெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னர் பள்ளிமுனைப் பகுதியில் காலை 6, 30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவத்தையடுத்து மன்னர் கோட்டை பொலீஸ் முகாமிலிருந்து றொக்கெட் லோஞ்சர்கள், மோட்டோ ஷெல்கள், பீரங்கிக் குண்டுகள், துப்பாக்கி வேட்டுகள் ஆகியவை அடுத்தடுத்து தீர்க்கப்பட்டன.

இதனல் சூழலிலுள்ள பல வீடுகள் சேதமடைந்தன.

தள்ளாடி முகாமிலிருந்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்த இராணுவம் நாலாபுறமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் சேதம் அடைந்த வாகனங்கள் ஆயுதப்படையினரால் முகாமிற்கு கட்டி இழுத்துக்கொண்டு செல்லப்பட்டன.

குண்டுத் தாக்குதலால் மன்னர் சித்தி விநாயகர் பாடசாலை ஓடுகள், கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்ததாகத் தெரிய வருகிறது.

சென். செபஸ்டியன் ஆலயத்திற்கு முன்னல் சென்ற ஆயுதப்படையினர், அங்கு பீதியால் ஆலயத்திற்குள் ஓடித் தஞ்சம் புகுந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், மூவர் பலத்த காயம் அடைந்ததாகவும் தெரி (4ஆம் பக்கம் பார்க்க

### அரச அறிக்கை

கொழும்பு, பெப்.26

மன்னர் தாக்குதலில் ஒரு சிப்பாய் மட்டுமே கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

படைகளுக்கும் போராளிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் பொது மக்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களுக்கு

# சத்திர சிகிச்சை செய்யமுடியாத நிலை

யாழ்ப்பாணம், பெப். 26

மன்னர் தாக்குதலில் படுகாயமடைந்த பொது மக்களுக்கு அவசர சிகிச்சை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னர் ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லை என்பதாலும்–

மாற்று ஏற்பாடாக காயமடைந்தவர்களை அவசர அவசரமாக யாழ்ப்பாணம் அல்லது அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கு அம்புலன்ஸ் வசதி இல்லாததுமே இதற்குக் காரணம்.

செய்தி அச்சுக்குப் போகும்போது மன்னர் வைத்திய அதிகாரிகள் வவுனியா ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### நாவற்குழியில் குண்டு வெடிப்பு

நல்லூர், பெப். 26

நேற்று பிற்பகல் இரண்டரை மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து சீருடையினர் நடைபவனியாகவும், கவச வாகனங்களிலும் வெளியே வர எத்தனித்தபோது இரண்டு குண்டுகள் வெடித்தன.

அதனைத் தொடர்ந்து சீருடையினர் பின்னேக்கி முகாமிற்குச் சென்றனர்.

இதனல் நாவற்குழி, அரியாலை பகுதிகளில் பதற்றம் நிலவியது.

* பிந்திய செய்தி

### வவுனியாவில் துப்பாக்கி சண்டை

கொழும்பு, பெப். 26

வவுனியாவில், நேற்றிரவு சுமார் 9 மணியளவில் ஆயுதப்படைகளுக்கும் போராளிகளுக்கும் இடையில் அரை மணித்தியாலமாக துப்பாக்கிச் சண்டை நடந்ததாகப் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

வவுனியா கச்சேரியடியிலேயே இச் சண்டை நடந்ததாக அறியப்படுகிறது.

கச்சேரிக்குச் செல்லும் வழியில் நிலக்கண்ணி வைக்கப்பட்டிருந்த போதிலும் அது நேரந் தப்பி வெடித்ததாம்.

துப்பாக்கிச் சண்டையின்போது அரசாங்க உயர் அதிகாரி ஒருவரின் வீடு உட்பட பல வீடுகள் சேதமடைந்ததாகவும் அறிய வந்தது.

### முச்சந்தி முனி



ஆட்சிப் பித்தும் வெறியும் பிடிச்சவைக்கு கடைசிக் காலம் உப்பிடித்தான் முடியிறது உந்தப் பட்டியலிலை சேருறதுக்கு இன்னும் சிலபேர் இருப்பினம்..........!

# ஜனதிபதி - டிக்ஸிற் நேற்று அவசர பேச்சு

## பேசிய கையோடு டில்லி பயணம்

கொழும்பு, பெப். 26

ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்றுப் பிற்பகல் அவசரப் பேச்சுக்களை மேற்கொண்டார்.

இப்பேச்சுக்கள் 45 நிமிடம் நீடித்தது.

கடந்த சில தினங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்ற சம்பவங்களைப் பற்றி எல்லாம் திரு. டிக்ஸிற் ஜனதிபதியிடம் கேட்டறிந்து கொண்டார்.

இந்திய உதவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் இலங்கை அரசு உறுதியுடன் இருப்பதாக திரு. ஜெயவர்த்தன திரு டிக்ஸிற்றிடம் எடுத்துச் சொன்னர்.

வடக்கு, கிழக்கில்இடம் பெற்ற சம்பவங்கள்பற்றி தான் சேகரித்த தகவல்கள், திரு ஜெயவர்த்தன தெரிவித்த விவரங்கள் ஆகியவற்றுடன் திரு. டிக்ஸிற் நேற்று (திங்கள்) இரவு 7.45 மணிக்கு புதுடில்லிக்கு விமானம் மூலம் பயணமானர்.

இந்திய அரசின் பணிப்பின் பேரிலேயே திரு டிக்ஸிற் திரு. ஜெயவர்த்தனவை நேற்றுக் காலை சந்தித்திருந்தார்.

இலங்கையுடனன

# இந்தியாவின் வெளியுறவு கொள்கை மீளாய்வு?

## டிக்ஸிற்கு வந்தஅழைப்பு முதற்படி

கொழும்பு, பெப். 26

இலங்கை சம்பந்தமான வெளியுறவுக் கொள்கையை இந்தியா மீளாய்வு செய்யப் போகிறதா?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இப்படிப் பேசப்படுகின்றது.

இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றை இந்திய அரசு உடனடியாக வரும்படி அழைத்ததைத் தொடர்ந்தே இப்படிப் பேசப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படுவது குறித்து இலங்கையின் நிலையில் புதிய மாற்றம் எதுவும் தென்படவில்லை என்று கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

திம்பு மாநாடு முறிவு அடைந்ததைத் தொடர்ந்து புதுடில்லியில் வைத்துத் தயாரிக்கப்பட்ட நகல் திட்ட யோசனைகளையே இலங்கை அரசு இன்னும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இருந்து இலங்கை அரசை இறங்கி வரச் செய்யுமுகமாகவே இந்திய அரசு இலங்கை சம்பந்தமான தனது வெளியுறவுக் கொள்கையில் சில நிர்ப்பந்தங்களை உருவாக்கலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

### சுபநேரம்

26 - 02 - 1986

புதன்கிழமை

சுபநேரம்:
4-59 முதல் 6-29 வரை

ராகுகாலம்:
12-29 முதல் 1-59 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

திருவள்ளுவர் குருபூஜை

# தமிழருக்கு சுயாட்சி

## வழங்கப்படும் வரை சர்வதேச நிதி உதவியை நிறுத்தச் சிபார்சு

லண்டன், பெப். 25

தமிழர் சுய ஆட்சி செய்யும் வகையான அமைப்பை ஏற்படுத்துவதே இலங்கைத் தமிழர் நெருக்கடிக்கு தீர்வு. இத்தகைய தீர்வை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன செய்ய வேண்டும்.

அதுவரை இலங்கைக்கான சர்வதேச நிதி உதவி வழங்கும் நாடுகள் தமது உதவியை நிறுத்தி வைக்கவேண்டும்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்அனைத்துலக மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கமான 'இன்டர்நஷனல் அலெஜ்' இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதேபோல் ஏற்கனவே வேண்டுகோள் ஒன்று விடுத்திருந்தது தெரிந்ததே.

'இன்டர்நஷனல் அலெஜின்' இந்தத் தீர்மானம் அதன் இலங்கைத் தலைவரான ஜூடி ஹாட் அம்மையாரால் இலங்கை ஜனதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

ஜூடி ஹாட் அம்மையார் முன்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் வெளிநாட்டு அபிவிருத்தி உதவித்துறையில் அமைச்சராக இருந்தபோதே இலங்கையின் விக்டோரியா நீர்த்திட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு 10 கோடி பவுண் நிதி உதவி வழங்க பிரிட்டன் இணங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

தமது இயக்கத்தின் அறிவிப்புத் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

இந்தியப் பிரதமர் ராஜீவ், தமிழகத்தில் உள்ள தமிழ்ப் போராளிகள், இலங்கை அரசு ஆகியவற்றுடன் விரிவான பேச்சு நடத்திய பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தினல் கனடா, நோர்வே ஆகிய நாடுகள் இலங்கைக்கான தமது நிதி உதவிகள் குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

பிரிட்டனும் மறு ஆய்வு (4 ஆம் பக்கம் பார்க்க)

# மந்திரி சபையில் மாற்றமா?

கொழும்பு, பெப். 26

அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்று கொழும்பு அரசு வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

அமைச்சர் முகம்மது தான் வெளிநாட்டுத் தூதராக செல்லக்கூடும் என்று பலமாக நம்பப்படுகிறதாம்.

சில அமைச்சர்களின் திணைக்களங்கள் மாற்றம் செய்யப்படலாம் என்றும் பேசப்படுகின்றது.

இதனிடையில் முக்கிய அமைச்சர் ஒருவரின் மகன் அடுத்த பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளராக நியமனம் பெற்றுப் போட்டியிட முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அந்த அமைச்சர் சுதந்திரக்கட்சியில் முன்பு முக்கிய பிரமுகராகவிளங்கியவராம்.

★ தமிழகத்தில் உள்ளூராட்சித் தேர்தல்

# நகராட்சி: தி. மு. க. கையில்

## ஊராட்சி: அ.தி.மு.க.முன்னணியில்

சென்னை, பெப்.26

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த நகராட்சி மன்ற தலைவர் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி அமோக வெற்றி பெற்றது

ஆனல் ஊராட்சி மன்றத் தேர்தல்களில் அண்ணு திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியே பெரும்பாலான தொகுதிகளில் முன்னணியில் நிற்கிறது.

இந்த தேர்தல்களில் தி. மு. க, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவை கூட்டணியாகவும்–

அ. தி. மு. க, இந்திரா காங்கிரஸ் ஆகியன ஒரு போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தின்படியும் போட்டியிட்டன.

நடைபெற்று முடிந்த 97 ஊராட்சி மன்றத் தேர்தல்களுக்கான முடிவுகளும் வெளிவந்து விட்டன. கட்சிகளின் நிலைவரம் வருமாறு:–

| | |
|---|---|
| தி. மு. க. | — 67 |
| அ. தி. மு. க. | — 11 |
| இந்திரா காங்கிரஸ் | —11 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூ | —04 |
| ஜனதா | —02 |
| முஸ்லிம் லீக் | —01 |

(4– ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி அக்கியூனோமீது துப்பாக்கிச் சூடு

## மயிரிழையில் உயிர் தப்பினார்

மணிலா, பெப். 25

திருமதி கொருசன் அக்கியூனோ மயிரிழையில் உயிர் தப்பினார். அவரைச் சுட்டுக்கொல்லுவதற்கு முயன்ற மார்க்கோஸ் ஆதரவாளர்களின் துப்பாக்கி இலக்குத் தவறிவிட்டது.

இவ்வாறு பிலிப்பீன்ஸ் செய்திகள் தெரிவித்துள்ளன.

திருமதி அக்கியூனோ அவரது இல்லத்தில் இருந்து வெளிவரும்போது இந்தத் துப்பாக்கிச் சூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பீன்ஸ் தலைநகரான மணிலாவில் திருமதி அக்கியூனோவை ஜனாதிபதியாக பிரகடனம் செய்வதற்கு பிலிப்பீன்ஸ் நாடாளுமன்ற எதிர்க் கட்சிகள் கூடி ஆராய்ந்தன.

இதற்கிடையில் தனது பதவி ஏற்பு வைபவத்தை திட்டமிட்டபடி நடத்தப்போவதாக மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

திருமதி அக்கியூனோவை ஜனாதிபதியாக்குவதற்கு எடுக்கும் முயற்சி ஜனநாயகத் தன்மை அற்றது, அரசியல் அமைப்புக்கு முரணான நடவடிக்கை என மார்க்கோஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதி மாளிகையின் எல்லா வழிகளுமே அடைக்கப்பட்டுள்ளன எனவும் மார்க்கோஸ் ஆதரவுப் படைகள் மாளிகையைக் காவல் புரிவதாகவும் செய்திகளில் தெரிவிக்கப்படுகிறது.

மாளிகையை இலக்கு வைத்து ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என மார்க்கோஸ் அஞ்சுகிறார்.

தமது குடும்பத்தினருடன் திசைப்படைந்த நிலையில் அங்கு அவர் இருப்பதாக மணிலா செய்திகளை ஆதாரம் காட்டி லண்டன் செய்திகள் தெரிவித்தன.

மார்க்கோஸ் மாளிகையை நோக்கி திரண்ட மக்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டு ள்ளன.

கண்படி தீர்க்கப்பட்ட இத் துப்பாக்கி வேட்டுகளால் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

தனியார் வாகனங்களில் இவர்களை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகவும் பலர் இறந்திருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

இராணுவம் கூடிய அளவில் மார்க்கோஸ் எதிர்ப்பு அணிக்கு ஆதரவாக இருப்பதாக பிரதி இராணுவத் தளபதி பிடல் றமோஸ் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிலையமும் பல இராணுவ நிலைகளும் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

விமானத் தளமொன்றில் திருமதி அக்கியூனோ ஆதரவுப் படைகளுக்கும் மார்க்கோஸ் ஆதரவுப் படைகளுக்கும் மோதல் நடந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தத்தளம்மீது ஹெலிக்கொப்டரில் இருந்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மார்க்கோஸ் ஆதரவுப் படைகளால் பலஹெலிக்கொப்டர்களும் பிரயாண விமானம் ஒன்றும் ரொக்கட் தாக்குதல் மூலம் சேதப்படுத்தப்பட்டன.

ஜனாதிபதி மார்க்கோஸ் அரண்மனை மீதும் ரொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் அங்கு இராணுவ சட்டம் பிறப்பிக்கப்படலாம் என மார்க்கோஸ் எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

பதவியிலிருந்து இறங்கிவிடுமாறு அமெரிக்கா முதன்முறையாக மார்க்கோஸைக் கேட்டுள்ளது.

மார்க்கோஸின் 20 வருட ஆட்சி சரிந்து கொண்டிருப்பதாக 'லண்டன் ரெலிகிறுப்' பத்திரிகை கருத்துத்தெரிவித்துள்ளது.

ஸ்பெய்னும் அமெரிக்காவும் மார்க்கோஸுக்கு புகலிடம் கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளன எனினும் மார்க்கோஸ் இதை மறுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் கிளார்க் விமான தளத்தில் இரண்டு அதிநவீன விமானங்கள் கடைசி நேர தேவை கருதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## நடிகர் அரவிந்த் தோல்வியை நேசிப்பவர்

''பகல் நிலவு'' படத்தில் சத்தியராஜின் மகனாக நடித்தவர் அரவிந்த்.

பட்டதாரி இளைஞரான இவர், பல வருடங்கள் நாடகங்களில் நடித்து, நல்ல அனுபவம் பெற்றபின் திரைப்பட நடிகரானவர்.

ஜி என் ரங்கராஜன் இயக்கி வெளிவந்த ''முத்து எங்கள் சொத்து'' இவரது முதல் படம்.

''இன்றைய தமிழ்த் திரையுலகில் பல இளம் நடிகர்கள் நல்ல முறையில் நடித்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் —

அவர்களில் நானும் ஒருவனாக இருக்கிறேன் என்பதை நினைக்கும்போது மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றார் அரவிந்த்.

''முத்து எங்கள் சொத்து'' வெளியானவுடன் ''படிக்காத பண்ணையார்'' படத்தில் நடிப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. மகிழ்வடைந்தேன்.

ஆனால் அதே நேரத்தில், சிவாஜி கணேசன், கே ஆர். விஜயா போன்றவர்களுடன் எப்படி நடிக்கப் போகிறேனோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன்

ஷூட்டிங் ஆரம்பமான அன்று, கே. எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்கள், என்னை அவ்வப்போது தட்டிக்கொடுத்து நடிக்க வைத்தார்.

''படிக்காத பண்ணையார்'' படத்தில் நடித்துக்கொண்டிருந்த போதே ''நியாயம் கேட்கிறேன்'' ''பகல் நிலவு'' போன்ற படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டேன் என்று பெருமையோடு கூறுகிறார் அரவிந்த்.

''தோல்விதான் வெற்றியின் முதற்படி என்று சொல்வார்கள். நானும் அப்படித்தான் நினைக்கிறேன், எதையுமே தோல்வியாக நான் நினைப்பதில்லை. சுருங்கச் சொன்னால் தோல்வியை நான் நேசிக்கிறேன்'' என்றார் அவர்

''எனக்குள் ஒருவன்'' படத்தில் சின்ன கேரக்டரை ஏற்று நடித்ததைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

ஆரம்பத்தில் எஸ் பி. எம். ஒரு நல்ல கேரக்டரைத் தருவதாகச் சொன்னார். தவிர்க்க முடியாத சில சூழ்நிலையின் காரணமாக அந்த கேரக்டரில் நடிக்க முடியாமல் போய்விட்டது என்றார்.

## ஆயுதசாலை கொள்ளை

அமிர்தசரஸ், பெப் 25

அமிர்தசரஸ் பொற்கோயிலை அடுத்துள்ள ஆயுதசாலையிலிருந்து தீவிரவாதிகள் பல றைபிள்களையும் வெடிமருந்துகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பொலீஸ் உடையில் வந்த இரு துப்பாக்கி இளைஞர்களே இந்தக் கொள்ளைச் சம்பவத்தை முன் நின்று நடத்தியதாகவும் கூறப்படுகிறது

1983ஆம் ஆண்டு முற்றுகைக்குப் பின் நடந்த அதிதீவிர துணிச்சலான சம்பவம் இது என கருத்துக் கூறப்பட்டது.

## வெளி உலகில்

## ஈரான் மீது குவெய்த் குற்றச்சாட்டு

### உறவு முறியலாம் எனவும் எச்சரிக்கை செய்துள்ளது

லண்டன், பெப். 25

ஈரானிய ஹெலிக்கொப்டர்கள் தமது எல்லைக்குள் பறந்து இடைஞ்சல்களை ஏற்படுத்துவதாக குவெய்த் முறைப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை குவெய்த்திலுள்ள ஈரானிய தூதரிடம் எச்சரிக்கைப் பாணியில் குவெய்த் எடுத்துக் கூறியுள்ளதாக நம்பப்படுகிறது

ஈரான் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் குவெய்த்துடனான ஈரான் உறவில் முறிவு ஏற்பட்டுவிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன் எச்சரிக்கையாக தனது கடற்படையையும் விமானப் படையையும் உஷார் நிலையில் இருக்குமாறு குவெய்த் உத்தரவிட்டுள்ளது.

## சேர்ச்சிலை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப். 25

பிரிட்டனில் வின்ஸ்டன் சேர்ச்சிலுக்கு எதிராக அங்குள்ள பொழுது போக்கு ஈடுபாட்டாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றைநடத்தியுள்ளனர்.

திரைப்படங்களும் தொலைக் காட்சிப் படங்களும் மற்றும் கலைக் காட்சி நிகழ்ச்சிகளும் கடுமையான ஆபாச தடுப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப் படவேண்டும் என நாடாளுமன்ற மசோதா ஒன்றை அவர் தயாரித்ததே எதிர்ப்புக்குக் காரணமாகும்.

45 வயதினரான சேர்ச்சில் ஒரு கொன்ஸர்வேட்டிவ் உறுப்பினர்- யுத்தகால பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் பேரன் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஈரான் - ஈராக்

## போரை நிறுத்த கோருகிறது

### பாதுகாப்பு சபை

ஜெனிவா, பெப். 25

ஈரான் ஈராக் போரை உடனடியாக நிறுத்துமாறு ஐ. நா பாதுகாப்புச் சபை இரு நாடுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

சர்வதேச அங்கீகரிப்புக்கு உட்பட தமது எல்லைகளுக்கு இரு நாட்டுப் படைகளும் வாபஸ் ஆக வேண்டும் எனவும் யுத்தக் கைதிகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் எனவும், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைத் தீர்வுக்கு வழி காணப்பட வேண்டும் எனவும் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட இந்தப் போரினால் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியானதற்கும் பாதுகாப்புச் சபை தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

ஈராக் போரின் போது இரசாயன ஆயுதங்களைப் பாவித்துள்ளதாகவும் சனரக சிதறுகுண்டு 'ஹெவி ஆர்ட்டிலறி' களை பாவித்துள்ளதாகவும் ஈரான் ஐக்கிய நாடுகள் சபையிடம் தனது முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பெரஸ் டி குவெய்லர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இரு நாடுகளும் போரில் தாம் தாமே முன்னேறியுள்ளதாக தெரிவித்துள்ளன.

## தமிழ் பெண்ணுக்கு முஸ்லிம் சம்மேளனம் வழங்கிய நஷ்ட ஈடு!

மட்டக்களப்பு, பெப். 26

கடந்த மாதம் காத்தான்குடிப் பகுதியில் ஏற்பட்ட பதற்றத்தின்போது தங்க மாலை ஒன்றைப் பறிகொடுத்த தமிழ் பெண் ஒருவருக்கு நஷ்ட ஈடாக 2 ஆயிரத்து 250 ரூபா கிடைத்தது.

காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் இந் நஷ்டஈட்டை பிரஸ்தாப பெண்ணிடம் கையளித்தது.

தமிழ், முஸ்லிம் இன ஒற்றுமையில் தீவிர அக்கறையுடன் செயல்படும் இந் நிறுவனத்தின் சேவைக்கு பெரும் பாராட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## முஸ்லிம்கள் நலன் பேண கிழக்கு மாகாண மஜ்லிஸ்

### காத்தான்குடி மாநாட்டில் அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு, பெப் 26

கிழக்குமாகாண முஸ்லிம்களின் நலன்களைப் பேணுவதற்கு 'கிழக்கு மாகாண மஜ்லிஸ்' என்ற அமைப்பு அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காத்தான்குடியில் நடந்த கிழக்கிலங்கை முஸ்லிம் பிரமுகர்களின் மாநாட்டில் இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இத்தகவலை செய்தியாளர்களிடம் பள்ளிவாசல் செயலாளர் நாயகம் அல்ஹாஜ் ஏ அகமது லெப்பை தெரிவித்தார்.

இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மாற்றுத் திட்டம் ஒன்றும் இந்த மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1. தமிழர், முஸ்லிம், சிங்களவர் அதிகம் வாழும் பகுதிகளில் இருந்து அவர்களின் நலன்களைப் பேணும் உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடியதாக தனித்தனி சபைகள் அமைக்கப்பட வேண்டும்.

2 கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கஷ்டங்கள் குறித்து மாகாணத் தமிழ் பிரமுகர்களிடம் எடுத்துச் சொல்லப்படும். பின்னர் கொழும்புத் தலைவர்களிடம் எடுத்துச் சொல்லப்படும். அதன் பின்னர் சென்னை சென்று கூட்டணித் தலைவர்களிடமும் எடுத்துச் சொல்லப்படும்.

3 முஸ்லிம்களின் உயர் கல்வி பாதிக்கப்படாது இருப்பதற்கு அம்பாறை முஸ்லிம்களுக்கு என்று தனிப் பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும்.

4 அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களிடம் இருந்து எடுக்கப்பட்ட காணிகள் மீண்டும் அவர்களுக்கே திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

## சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவைக்குப் பாராட்டு

சுன்னாகம், பெப். 26

முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இப்பொழுது முதலுதவி சிகிச்சைகள் அத்தியாவசியமாக தெரிந்திருக்க வேண்டியுள்ளது. மக்களுக்கு அறிவுரைகளை வழங்கவும் - காயமுற்றோருக்கு முதலுதவிகளை அளிக்கவும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் செய்யும் சேவை அளப்பரியது.

இவ்வாறு உடுவில் அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

உடுவில் உதவி அரச அதிபர் பகுதிக்குட்பட்ட பிரதேசங்களுக்கான சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அந்த வைபவத்தில் பேசுகையிலேயே உதவி அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடந்த இவ் வைபவத்தில் தலைமையுரையாற்றிய திரு. ஆ. மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில் 'துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மலிந்துள்ள இவ்வேளையில் இரத்தப் பெருக்கால் மரணமாவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதனைக் குறைக்க சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு உதவ முடியும்'' என்றார்.

கடந்த எட்டு ஆண்டுகட்கு மேலாக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு தமிழ் மண்ணில் ஆற்றிவரும் சேவைகள் பற்றியும் அதன் இன்றைய அவசியம் பற்றியும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் குறிப்பிட்டார்.

முன்னாள் யாழ். அபி. சபை உறுப்பினர் டாக்டர் ஆ. நடராசா பேசுகையில் கூறியதாவது:-

முதலுதவி சிகிச்சைகளை கற்றால் மட்டும் போதாது. மிகச்சிரமமான நேரத்தில் மக்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய மனோநிடம் இருத்தல் அவசியம். ஆரம்ப சுகாதார நிலையங்கட்கு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவுகளும் கிராமங்களில் மிகச்சிறப்பாக இயங்கினால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை அரசினர் வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளிகளின் தொகையை கட்டுப்படுத்தி வைத்திய சாலை நிர்வாகத்தினருக்கும் பொதுமக்களுக்கும் வசதியளிக்க முடியும்'' என்றார்.

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் இத்தகைய பிரிவு ஏற்படுவது மிகவும் பொருத்தமானது என்றார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் சுன்னாகம் பிரஜைகள் குழு செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம், இளைப்பாறிய மேலதிக அரச அதிபர் திரு. பி. எல். பற்றிக் வளர்ந்தோர் கல்வி அதிகாரியும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் வட பிரதேச ஆணையாளருமான திரு. சி. எஸ். சுப்பிரமணியம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

முதலுதவி தாதிப்பயிற்சியில் சித்திபெற்ற அறுபது பெண்களுக்கு தராதரப்பத்திரங்களை மேலதிக அரச அதிபர் பி. எல். பற்றிக் வழங்கினார்.

## சுன்னாகம் சமாதானசபை கூட்டம் இன்று

சுன்னாகம், பெப். 26

சுன்னாகம் சமாதான சபையின் பொதுச்சபை இன்று புதன்கிழமை மாலை 5.00மணிக்கு சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் கூடுகிறது.

நவா மினி
(உஷா மினி முன்பாக)
248| 5, K. K.S. Road, JAFFNA.
''ரம்போ''
RAMBO
() 1985ஆம் ஆண்டில் உலக ரீதியில் வசூலைக் கொடுத்த படம்.
() இதுவரை நீங்கள் பார்த்திருக்க முடியாத, ஒரிஜினல் பிரதியில் முதன் முறையாக
(12.30, 9.00 First Blood I)

## கல்முனை கல்வி அலுவலகம் இடம் மாறியது

அம்பாறை, பெப். 25

கல்முனை கல்வி அலுவலகம் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டது.

இதுவரை கல்முனையில் இயங்கிவந்த இந்த அலுவலகம், கடந்த 5ஆம் திகதி முதல்கல்வி அமைச்சரின் செயலாளரது உத்தரவின் பேரில் அட்டாளைச்சேனைக்கு இடம் மாறியது.

கல்முனையிலிருந்து இந்த அலுவலகம் இடம் மாறியதுக்கு முல்லைத்திவு மாவட்ட அமைச்சரும் கல்முனை எம்.பியுமான ஜனாப் ஏ. ஆர் மன்சூர் கல்வி அமைச்சிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

## திருமுறைப்பாடல் ஒலிப்பதிவு நாடாவில்

நல்லூர், பெப். 26

அகில இலங்கைத் திருமுறை மன்றம் தேவாரத் திருமுறைப் பாடல்களை ஒலிப்பதிவு நாடாக்களில் (கஸெட்) பதித்து வெளியிட இருக்கிறது.

இந்த ஒலிப்பதிவுக்கான விடயத்தில் ஈழத்து, தமிழக - கலைஞர்களும்பங்கு பற்றுகின்றனர்.

அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் திருமுறைகளுக்கான உரை விளக்கத்தினைக் கொடுத்து இருக்கிறார்.

இதன் வெளியீட்டு விழா அடுத்த மார்ச் மாதம் நல்லூரில் நடைபெற இருக்கின்றது.

இதற்கான ஏற்பாட்டை அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி கவனித்து வருகின்றார்.

மலையக வன்செயல்

## உதவி சுப்ரிண்டனும் 16 தமிழர்களும் கைது!

கொழும்பு, பெப். 26

தோட்ட உதவி சுப்ரிண்டன் ஒருவர் உட்பட 16 மலையகத் தமிழர்கள் திங்கட்கிழமையன்று கைது செய்யப்பட்டனர்.

நடந்துமுடிந்த மலையக வன்செயல்கள் தொடர்பாகவே மேற்படி கைது செய்யும் படலம் ஆரம்பமாகியுள்ளது

வட்டகொட என்னும் இடத்தில்தான் 16பேரும் கைது செய்யப்பட்டனர்.

எரிக்கும் வேலைகளுக்கு எரிபொருள் கொடுத்து உதவினார் என்ற சந்தேகத்தின் மீது தான் உதவி தோட்ட சுப்ரிண்டன் கைதானார்.

மலையகத்தில் நோர்வூட், ஹட்டன், லிந்துல, தலவாக்கலை, பூண்டுலோயா, பொகவந்தலாவ, அக்கரைப்பத்தனை நுவரெலியா, மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் அண்மையில் வன்செயல்கள் இடம்பெற்றன என்பது தெரிந்ததே.

## அறுவடையை குழப்பும் மழை

கரவெட்டி, பெப். 26

வடமராட்சிப் பகுதியில் இடைஇடையே பெய்யும் மழையால் நெல் அறுவடையைக் குழப்பி வருகிறது.

வடமராட்சிப் பகுதியில் தற்போது நெல் அறுவடை நடைபெறுகிறது குறிப்பிடத்தக்கது.

## எதிர்ப்பு இயக்கம் நடத்த முஸ்தீபு

யாழ்ப்பாணம், பெப். 26

தங்கவேலாயுதபுரம் படுகொலையை ஆட்சேபித்து பெரும் எதிர்ப்பியக்கம் ஒன்றை நடத்துவதற்கு அக்கரைப்பற்று, அம்பாறை, மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## மக்கள் முகம்

### நிர்வாகிகள்

மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய அண்ணா சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சமயம் பின் வருவோர் புதிய நிர்வாகிகளாக, தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் திரு. ப. சோமசுந்தரம், திரு இ. வேலும்மயிலும், தலைவர் திரு. வீ. செல்லக்கதிரமலை, உபதலைவர் திரு இ. நடராசா, இணைக் காரியதரிசிகள் திரு. செ. தனபாலசிங்கம், திரு. த. அழகரத்தினம், பொருளாளர்கள் திரு. இ. விஜயரத்தினம், திரு. க. அழகராசா.

தேவை

சிறந்த பெரிய ரக இராசவள்ளி, கருணைக் கிழங்கு பெருந்தொகையாகக் கொள்வனவு செய்யப்படும். உடன் தொடர்புகொள்க: C கணேஷன், 286, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வேலையாள் தேவை

தோட்டத் தொழில், பண்ணை என்பவற்றில் அனுபவம் உள்ளவரும் சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும்: ரொக் எஞ்ஜினியேர்ஸ், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

வகுப்புகள்

General Arts Qualifying பரீட்சைக்கான உயர்தர ஆங்கில மொழியுட்பட விருப்பத்திற் கேற்ற பாடங்களைச் சிறப்புப் பட்டதாரிகள் கற்பிக்கின்றார்கள். மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை முதல்வரோடு உடனே நேரில் தொடர்பு கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இறைவனின் அஞ்சல் பெட்டிகள் ஏழைகளே. அஞ்சல் பெட்டிகளினுள் போடப்படும் தபால்கள்தான் உரியவர்களிடம் போய்ச் சேரும். அதுபோல் ஏழைகளுக்குச் செய்யும் தருமம்தான் இறைவனிடம் சேரும்.

- குன்றக்குடி அடிகளார்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, லோதர் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
26-02-86 த. பெ. 28

## ஐ. நா. குழு வருகை

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி திரு மாக்மூட் நாளை இலங்கை வருவதாகச் செய்தி கிடைத்துள்ளது

1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்கள் பலர், குறிப்பாக இளைஞர்கள் அவசர அவசரமாக வெளிநாடு சென்றார்கள்.

தமிழ் இளைஞர்களை கண்ட இடத்தில் வைத்துக் கைது செய்வதும், வீடு புகுந்து கைது செய்வதும், காவலில் வைத்துச் சித்திரவதை செய்வதும் அப்போது பாதுகாப்புப் படையினரின் நாளாந்த நடவடிக்கைகளாக இருந்தன.

தாய் தந்தையர் தமது ஆண் பிள்ளைகளை வீட்டில் வைத்து இருக்க அஞ்சினார்கள். அதனால் ஆயிரம் ஆயிரமாகத் தமிழ் இளைஞர்கள் மேற்கு ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்குப் பறந்தார்கள்.

கொடுமை நிறைந்த அரசாங்கங்களின் இன்னல்களுக்கு ஆளாவோருக்கு அரசியல் தஞ்சம் கொடுத்து, அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் காருண்ய சட்ட விதிகள் மேற்சொன்ன நாடுகளில் அமுலில் இருந்தன. அந்தச் சலுகையைப் பயன்படுத்தி தமது உயிரைப் பாதுகாத்து வாழ்க்கையைக் காப்பாற்றலாம் என்ற நோக்கத்துடனேயே இலங்கைத் தமிழர்கள் அங்கு விரைந்தார்கள்.

அளவு கணக்கில்லாமல், ஆயிரம் ஆயிரமாய் அந்த நாடுகளுக்குப் 'படை' எடுத்தனர். அதனால் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் பெரும் பிரச்சினைகள் உருவாகின.

இந்த இக்கட்டான நிலையில் பிரஸ்தாப நாடுகள் இலங்கைத் தமிழர் வருகையைக் கட்டுப்படுத்தத் தொடங்கின. யார் உண்மையான அகதிகள் அவர்களைப் பின்பற்றி வந்தவர்கள் யார் என்பதை ஆராய்ந்து, உண்மையாகவே அரசியல் பழிவாங்கல் கொடுமைகளுக்கு ஆளானவர்களுக்கு மட்டுமே தஞ்சம் அளிக்க முடியும் என்று நிபந்தனை விதிக்கத் தொடங்கின.

இலங்கைத் தமிழர்கள் துன்புறுத்தப்படவில்லை. அவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புகள், சலுகைகள் பெறுவதற்காகவே வெளிநாடு சென்றார்கள். இவ்வாறு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தவறான பிரசாரம் மேலை நாடுகளின் அந்தக் கடும்போக்குக்குக் காரணமாக இருந்தது.

சம்பந்தப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் உண்மை நிலையை அறிவதற்காக இங்கு வந்தபோதும் அரசு அவர்களுக்கு தவறான கருத்துக்களை புகட்டி அனுப்பியது.

அரசாங்கத்தின் அட்டூழியங்களைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டக்கூடிய பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லவிடாது தந்திரோபாயமாக நடந்து தனது காரியத்தைச் சாதித்தது.

இந்தியா மட்டும் இங்கு நடக்கும் கொடுமைகளையும், சித்திரவதைகளையும் அறிந்து உணர்ந்ததால் அகதிகளைத் திருப்பி அனுப்ப நினைக்கவில்லை.

இலங்கையில் தமிழர் படும் இன்னல்களை அறிவதற்காக வரும் ஐ. நா. குழுவும், முன்னர் வந்த குழுக்களைப் போல் நல்லதையே காணும் வட்டத்திற்குள் நின்று விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

சுதுமலை, தாவடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, திருமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அங்கு வாழும் மக்கள் கணத்துக்கு கணம் இறந்து, இறந்து உயிர்வாழ்வதையும் ஐ. நா. குழு நேரில் காண்பதற்கு வசதி செய்யப்படவேண்டும்.

இது விஷயத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள பிரஜைகள் குழுக்களுக்குப் பெரும் பணி உண்டு. அகதிகள் புனர்வாழ்வு வேலைகளைச் செய்துவரும் தொண்டர் ஸ்தாபனங்களும் இதில் பங்காற்ற வேண்டும்.

அண்மையில் பாதிக்கப்பட்ட இடங்கள், மக்களை மட்டும் காண்பிக்காது, 1983 ஜூலை தொடக்கம் பாதிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டவர்களின் விவரங்களை ஐ. நா. குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

தமிழர்களுக்குச் சாதகமாக முடிவு எடுங்கள் என்று ஐ. நா. குழுவிடம் ஆதரவு திரட்ட வேண்டிய அவசியமில்லை. படைகள் இங்கு நடத்தும் அட்டூழியங்களையும், அவற்றால் ஏற்படும் தாக்கங்களையும் சரியான முறையில் அவர்களுக்குப் "படம் பிடித்துக்" காட்டினாலே போதும். நியாயம் எம் பக்கம் திரும்பும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்க வேண்டும் என்ற நோக்குடன் ஐ நா. குழு வருவதால், அரசாங்கம் எவ்வளவு தடை விதித்தாலும் அது வடக்கு, கிழக்குக்கு வருமென்றே நினைக்கலாம்.

அப்போது நடந்த சம்பவங்களை, பாதிப்புக்களை, தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையை சுருங்கச் சொல்லி, உரிய அத்தாட்சிகளைக் காட்டி விளங்கவைக்கும் சாதுரியம் எம்மவர்க்கு வேண்டும். இதிலும் நான் முந்தி, நீ பிந்தி என்று வம்புச் சண்டை போடாமல் ஒன்று கூடி, திட்டமிட்டுத் தகவல் கொடுப்பது பிரதானமாகும்.

# நீதிமழை பொழிந்து நன்னெறிக்கு வழிகாட்டிய அருள்மேகம் திருவள்ளுவர்

## குருபூஜை இன்று

-- இ. சுலோசனா --

மிகுந்த வெப்பம் ஏற்படும் போது இன்று மழை வரும் என்று கூறுகின்றோம். அவ்வாறே சில சமயங்களில் மழை பொழிவதையும் காண்கின்றோம்.

அதே போன்று அநீதியாகிய வெப்பம் மிகுந்த போது ஞானமாகிய வானத்தில் அருளாகிய கொண்டல் தோன்றி நீதி மழை பொழியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நீதி எது? அநீதி எது? என்று விளங்காது உயிர்கள் கோடையால் வாடிய போது மெய்ஞ்ஞானமாகிய வானத்தில் திருவள்ளுவராகிய அருள் மேகம் தோன்றி அறம், பொருள், இன்பம் என்ற மூன்று உலகங்களும் தழைக்க ஆயிரத்து முந்நூற்று முப்பது முறை நீதி மழைகளைப் பொழிந்தது. அந்நன்னீர் வற்றாமல் பள்ளத்திலும் மேட்டிலும் இன்றும் தங்கி நின்று வழிகாட்டுகிறது.

வள்ளுவரைப் பெற்று அவரை உலகத்துக்கே தனிப்பெரும் பொக்கிஷமாகக் கொடுத்த பெருமை தமிழ் நாட்டின் தனிப் பெருமை

இதனைப் பாரதியார்-
"வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ் நாடு"

எனக் கூறியுள்ளார்.

பாம்பறியும் பாம்பின் கால்' என்பது போல ஞானிகளை ஞானிகளே அறிவர். திருவள்ளுவர் மனிதருள் தேவர். அவரை மனிதராக எண்ணக் கூடாது. 'தேவர் குறளும்' என்ற வெண்பாவினால் ஆன்றோரும் அருணகிரிநாதரும் எனக் கூறி மகிழ்ந்தார்கள். அருணகிரிநாதர்,

'திருவ[ள்]ளுவ தேவர்
வாய்மை என்கிற பழ
மொழியை ஓதியே
யுணர்ந்து' என திருப்புகழில் அழகாகக் கூறியுள்ளார்.

'இடரற முப்பால் செப்பிய' என்று அறம், பொருள், இன்பம் எனக் கூறியதாக அருணகிரிநாதர் தனது புகழில் கூறுகிறார்

வள்ளுவர் ஒருவருக்கே 'தெய்வப்புலவர்' என்று பெயர். அவர் சங்கப் புலவர் நாற்பத்தொன்பது பெருமக்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவர். தூய வாழ்வில் வாழ்ந்தவர். எல்லா அறமும் உணர்ந்தவர். இத்தகைய செந்நாப் போதர் திருவாய் மலர்ந்தருளிய பொதுமறையும் பொன்னும் புகழுடையது.

முப்பாலாம் நாற்பொருள்களையும் நனி விளக்குவது திருக்குறள், நம் செந்தமிழுக்கே ஒரு பெரிய பெருமையைக் கொடுத்துவிட்டது.

இத்தன்மையான நூலின் சிறப்பையும் ஆசிரியரின் சிறப்பையும்

'சடுகைத்துளைத்து ஏழ்
கடலைப்புகட்டி குறுகத்
தறித்த குறள்' என்றும்
'ஆலும் வேலும் பல்
லுக்குறுதி நாலும் இரண்
டும் சொல்லுக்குறுதி'

என்ற அடிகள் மூலம் சிறப்புற விளக்கப்படுகிறது.

திருமால் குறள் வடிவு கொண்டு இரண்டடியால் மூவுலகையும் அளந்தார். வள்ளுவர் தமது குறளின் இரண்டடியால் எல்லா உலகங்களையும் அளந்து விட்டார்.

திருக்குறள் ஓதுவதற்கு எளிது; மனப்பாடம் செய்ய சுலபம்; ஒரு முறை படித்தாலே போதும் வேதத்திலுள்ள விழுப்பொருள்களையெல்லாம் விளக்கமாக உரைப்பது; நினைக்கும் தோறும் நெஞ்சிலே தெவிட்டாத இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்வது; இப்படிக் குறளின் பெருமைமூலம் வள்ளுவர் புகழை எடுத்துக் காட்டுகின்றார் பாங்குடி மருதனார்.

எல்லாத் தேசத்தாரும் எல்லா நிறத்தவரும், எல்லாச் சமயத்தாரும், எல்லாக் காலத்தாரும் கருத்து வேறுபாடின்றி ஒப்ப முடிந்த உண்மை வேதத்தை நமக்குத் தயாரித்தளித்த வள்ளுவரை போற்றினால் மட்டும் போதாது, அவரைப் போல வாழ்ந்துகாட்ட வேண்டும். அல்லது அவரின்கருத்துப்படி வாழ்ந்து காட்ட வேண்டும்.



**பொய்யாமொழி**

**குறள்:**

செல்விருந்து ஓம்பி வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

**பொருள்:**

வந்த விருந்தினரைப் போற்றி, இனி வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான்.

## கலை, பண்பாட்டு முயற்சிகளில் எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்

### எளிய, தெளிவான நடைபற்றியும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 26

தமிழினம் தனது தனித்துவத்தைப் பேணிக்காப்பதில் திடசங்கற்பம் பூண்டுள்ள கால கட்டத்தில் கலைத்துறையிலும் பண்பாட்டு முயற்சிகளிலும் கலைஞர்கள் எழுத்தாளர்கள் உரிய பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் திரு. சசிபாரதியின் தலைமையில் ஞாயிறு பிற்பகல் "இன்றைய இலக்கியம்" என்ற தலைப்பில் உரையாற்றிய கலைஞர் முருகையன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். கவிஞர் கல்வயல் குமாரசாமி வரவேற்புரை கூறினார்.

கவிஞர் முருகையன் தனது பேச்சில் தொடர்ந்து கூறியதாவது:-

படைப்பாளிகள் எளிய நடையிலே தெளிவாக எழுத வேண்டும். அப்போதுதான் படைப்புக்களுக்குச் சமூகப் பயன்பாடு ஏற்படும்.

வேண்டுமென்று சிலர் தெளிவின்றி எழுதுகிறார்கள். வாசகர்களைத் திகைக்கவைக்க திடுக்கிடவைக்க விரும்புகிறார்கள் இத்தகைய வித்தைகள் இலக்கியத்தில் தேவைதானா?

பல நுட்பமான கருத்துக்களை மிகவும் தெளிவான நடைமுறையிலே எமக்குத் தந்தவர் ராஜாஜி. தத்துவக் கருத்துக்களானாலும் சரி, தொழில் நுட்ப விடயங்களானாலும் சரி, அவற்றை இலகு தமிழில் வெளியிடலாம் என்று துணிவுதந்தவர் ராஜாஜி. தமிழில் முடியுமா? என்ற நூல் மூலம் இதனைச் சாதித்தவர் அவர்.

படைப்பாளிகள் கட்டாயமாகத் தமிழ் இலக்கணக் கூறுகளைப் படிக்க வேண்டும். அவர்களுக்கு இலக்கியப் பயிற்சி இருப்பது நல்லது. தமிழ் அறிவு இல்லாதவர்கள் இலக்கியப் பயிற்சி இல்லாதவர்கள் எழுதக் கூடாது என்பதல்ல. ஆனால் படைப்பாளிகள் அனைவரும் தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும்.

உமியைச் சப்பட்டை நெல்லை நல்ல இலக்கியம் என்று நம்பி வாசகர்கள் ஏமாறக் கூடாது. எனவே சீரிய, ஆரோக்கியமான இலக்கியம் படைக்க எழுத்தாளர்கள் முன்வருவது அவசியம்.

ஆதரவு, அல்லது எதிர்ப்பின் மத்தியிலேயே இலக்கியம் வளரும் ஆதரவு கிடைப்பின் படைப்பாளிகளுக்கு ஊக்கம் பிறக்கும். கண்டனங்களின் மத்தியில் படைப்பாளிகளுக்கு எதிர்மறை உந்தல் விளைகிறது.

"சிறப்புக்கு ஒரு சிகரம் படைப்போம்" என்ற கூற்றுடன் தனதுபேச்சை முடித்தார் கவிஞர் முருகையன்.

நாவலாசிரியர் அகஸ்தியர், திரு அ யேசுராசா, திரு என். லோகராசா, கலாநிதி. அ. நா. சுப்பிரமணியம், நான் சஞ்சிகை ஆசிரியர் வண வின்சன்ட் அடிகள் திரு. எஸ். தேவராசா, பண்டிதர் அ சச்சிதானந்தன் ஆகியோரும் கருத்துரை வழங்கினார் [illegible] நன்றியுரை கூறினார்.

### பண்டிதர் வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

ஆரிய, திராவிட பாஷா விருத்திச் சங்க பண்டித, பாலபண்டித வகுப்புக்கள் மார்ச் முதலாம் திகதி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் நல்லை ஆதீன மேலாளருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

## பதில்அதிபர்கள் விரைவில் நிரந்தரம்

அம்பாறை, பெப். 26

1980 ஏப்ரலில் அதிபர் நியமனம் நடந்தபோது பாதிக்கப்பட்ட பதில் அதிபர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் [illegible] முறைப்பாட்டைத் தொடர்ந்து கல்வி [illegible] நிரந்தர நியமனங்களை வழங்க முடிவு செய்துள்ளது.

## மனிதனை விடுதலைப் பாதையில் வழி நடத்தும் கலை இலக்கியம்

### விமர்சனத்தை அறிவியல் பூர்வமாக்கிய ஈழத்தவர்கள்

யாழ்ப்பாணம் பெப். 26

கலைஇலக்கிம், இதயத்தைத் தொட உணர்வுகளைத் தூண்டி, மனவிசாலத்துக்கு வழிசெய்து மனிதனை விடுதலைப் பாதையில் இட்டுச் செல்லும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளையின் ஆதரவில் "சமூகம், இலக்கியம், கருத்துநிலை' என்றதலைப்பில் சிறப்புரை ஆற்றிய யாழ் மாவட்ட சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார். திரு என். சோமகாந்தன் தலைமை வகித்தார். திரு க. சண்முகலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

இலக்கியம் சமுதாயத்தின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்று பொதுவாகக் கூறுவார்கள். ஆனால் உண்மையில் இலக்கியம் கலைஞனின் மனோபாவத்தின் ஊடாகவே யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது.

ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறைக் கருத்து நிலைக்கு எதிராக திலகர் வழியில் தீவிரவாத போராளியாக விளங்கிய காரணத்தால் பாரதி புதிய உயிருள்ள பாடல்களை நமக்குத் தந்தான். கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகிய நாவல்களும் அந்த வகையிலே தோன்றியவை.

1960 - 65ஆம் ஆண்டு வரைக்கும் தமிழ் இலக்கிய விமர்சனம் வெறும் ரசனை அடிப்படையில் இருந்தது. இதனை அறிவியல் பூர்வமான நவீன விமர்சனமாக மாற்றிய பெருமை மூவருக்கு உண்டு. பேராசிரியர் வானமாமலை, பேராசிரியர் கைலாசபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரே அம் மூவராகும். சங்க காலம்முதல் பாரதி ஈறாக அமரர் கைலாசபதி மேற் கொண்ட இலக்கிய விமர்சனம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே கொள்ள வேண்டும்.

இலக்கியப் பரப்பிலே இன்பியல் வாதத்தையும் பயன்பாட்டு வாதத்தையும் இணைத்து சமரசம் கண்டது மார்க்சிய கண்ணோட்டம்

சிங்கள மக்கள் மத்தியிலும் சாதிப்பூசல் மிகவும் பாரிய ரீதியில் அமைந்துள்ளது. பல சாதிப் பாகுபாடுகள் காணப்படுகின்றன. இன்று தமிழர்களைப் பொறுத்த அளவில் பேரினவாத ஒடுக்குமுறை முதன்மைப் படுத்தப்பட்டு உள்ளது.

தமிழ்ப்பெண்கள் இன்று நமது சமூகத்தில் முகம் கொடுக்கும் ஒடுக்குமுறை மூன்று வகையானது. வர்க்க ரீதியாகவும் பால் ரீதியாகவும், இன ரீதியாகவும் தமிழ் மகளிர் ஒடுக்குமுறைக்கு உள்ளாவதைக் காண்கிறோம் இவ்வாறு திரு. சண்முகலிங்கம் பேசி முடித்தார்.

கலாநிதி சோ கிருஷ்ணராசா, கலாநிதி எஸ். மௌன குரு, திருமதி. சித்ரலேகா மௌனகுரு, திரு அ. யேசுராசா, புலவர் இ. முத்துச்சிவானந்தன், நாவலாசிரியர் எஸ். அகஸ்தியர் வட மாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. வெ சிவராசா ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

அமைப்புச் செயலாளர் திரு ஐ. சாந்தன் நன்றியுரை கூறினார்

## நவாலியில் வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், பெப். 26

நவாலி மகாவித்தியாலயத்தில் திருவள்ளுவர் விழா, வித்தியாலய அதிபர் திரு செ. கதிர்காமத்தம்பி தலைமையில் இன்று நடைபெறும்

வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி. மகேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

திருக்குறள் மனனப் போட்டி, பேச்சுப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகளும் இன்று வழங்கப்படும்.

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப் 26

இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் பிரெஞ்சு விஞ்ஞான உடை தயாரிக்கும் வகுப்பு மீண்டும் மார்ச் முதலாம் திகதி யாழ் லயன்ஸ் கழக ஆதரவில் ஆரம்பமாகிறது

கில்னர் மண்டபத்தில் இவ்வகுப்புகள் இடம் பெறும்.

வண பிதா அல்பர்ட் அன்ரனி காலமானதைத் தொடர்ந்தே இந்த வகுப்பு நிறுத்திவைக்கப்பட்டது

இப்பயிற்சி வகுப்பில் தேர்ச்சி அடையும் மாணவிகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கவும், உற்பத்திகளுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பும் பெற்றுக் கொடுப்பதற்கும் சாட்டோ (Sarto) சர்வதேச நிறுவனம் முன்வந்துள்ளது.

## இலவச மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு மருத்துவச் சான்றிதழ் அடையாள அட்டை அவசியம்

யாழ்ப்பாணம், பெப். 26

இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் ஒன்றை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் செயற்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் மூக்குக்கண்ணாடிக்குரிய மருத்துவச் சான்றிதழ், தேசியஅடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்குப்படி லயன்ஸ் கழகம் வேண்டியுள்ளது

மருத்துவச் சான்றிதழ் பெற வசதியற்றவர்களுக்கு கண் பரிசோதனை நடத்தி அச்சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கவும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்து கொடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூக்குக் கண்ணாடிபெற விரும்புவோர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி வருமாறு: டாக்டர், எமில் அந்தனிசியார், சில்லாலை, பண்டத்தரிப்பு

## வித்தாரம்

என்ன, வந்தாச்சோ முரளியார்?

வாரும், வாரும்!

பூவும் பொட்டுமாய் வாறீர். கனகலா நிதான். கோயில் பக்கம் போன தாக்கும்!

இந்தக் காலத்திலை உன்ரை வயதுப் பெடியங்களுக்குக் கோயிலுக்குப் போறதுக்கு நேரமிருக்கிறதில்லை.

பள்ளிக்கூடம் எண்ணுவினம், பந்தடிக்கிறது எண்ணுவினம், ரி. வி. பார்த்தோம் எண்ணுவினம். படம்பார்த்தோம் எண்ணுவினம். ஆனால் கோயிலுக்குப் போனேம் அல்லது போப்போறேம் எண்டு சொல்லுறது மிகக்குறைவு.

திருவிழாக்காலம் எண்டாப் போவினமாக்கும். ஆனா அப்ப போறது கோயிலுக்குப் பிடுறதுக்கு இல்லை. என்னத்துக்கு எண்டது உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும். எல்லாருக்கும் தெரியும்.

என்ன பேச்சைக் காணயில்லை. லேசா ஒரு சிரிப்புச் சிரிக்கிறாய். .!! ஹி! ஹி! அதை விடு.

நீங்கள் இளமட்டங்கள் கோயிலுக்குப் போக நேரமில்லை பல சோலியள். எங்கடை காலத்தை விட இப்பத்தைப் பெடியளுக்குப் பத்துமடங்கு சோலி!

ஆனா எங்கடை வயது வந்த ஆம்பிளையள், பெம்பிளையள் எல்லாம் காலை மாலை எண்டு, கோயிலுக்குப் போயினம்தான். என்ன பெரிய வேலை இருந்தாலும் கோயிலுக்குப் போற 'புறோகிறாமை' அவை 'கான்சல்' பண்ணுறது வலு குறைவு.

வெளியிலை இதைப் பாக்கிறவை எல்லாம் அவை பெரிய பக்த சிரோன்மணியள் எண்டு தான் நினைக்கிறது.

அவை நேரத்தை மினைக்கெடுத்தி கோயிலுக்குப் போறதாலை ஏதாவது புண்ணியம் சேரும் எண்டு நான் நினைக்கயில்லை.

கோயிலுக்குப் போகினம். கும்பிடுகினம் விபூதி, சந்தனம் பூசிப் பொட்டு வைக்கினம் எண்டா மட்டும் போதுமே.

மூலஸ்தானத்தில் பஞ்சாலாத்தி காட்டயிக்கை கூட சில பேர் பக்கத்து வீட்டுப் பவானியைப் பற்றியும் அடுத்த வீட்டுப் பெட்டை தாய் தகப்பனுக்குத் தெரியாமல் ஓடினதைப் பற்றியும் வலு விவரமாக விளாசிக் கதைத்துக் கொண்டு இருப்பினம்.

பிரிட்ஜ் கதை, காஸ் குக்கர் கதை, கசட் கதை, வீடியோக் கதை எல்லாத்தைப் பற்றியும் பிரசங்கம் வைக்கிறது கோயிலிலைதான்.

பொம்பிளையளை விடேன் அவைக்கு உது பிறவிக் கொடை!

ஆம்பிளையளைப் பார். கோயிலிலை போய் பூசை நேரத்திலை தான் அரசியல் பேசுவினம். தமிழன்ரை தலைவிதியை நோவினம்.

இதுகள் எல்லாம் கோயில்களிலை இப்ப சாதாரண நடைமுறையாய்ப் போச்சு.

தேவார திருவாசகத்தை ஒருவர் பக்தியோடை படிச்சுக் கொண்டு இருந்தாலும் அவை தங்கடை "லெக்சரைக்" குறைக்கிறதாகக் காணேமே எண்டு நண்பர் ஒருவர் குறைப்பட்டார்.

ஆலய தரிசனம் முறைப்படி செய்தால் தான் பலனுண்டு எண்டு பழங்காலத்து ஆக்கள் நம்பிச்சினம். இப்ப கோயிலுக்குப் போறது பொழுது போக்காய்ப் போச்சு. கலியுக காலம் யார் சொல்லி யார் திருந்திறது? யார் சொல்லி யாரைத் திருத்துறது?



கொண்டாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய 4வது பிரிவு O|L
ஆரம்பம்:
3-3-86
DAY CLASS - காலை 8 மணி
EVENING CLASS - பி.ப, 2-15
5, 6, 7, 8 - பி.ப. 2-15
VICKNA Tuition Centre
52, STANLEY ROAD, JAFFNA.

# உதயன்

26. 02. 1986

இறுதி மீட்டல் வகுப்புக்கள்
கலை, வர்த்தகம் 86
ஆரம்பமாகிவிட்டன.
சனி, ஞாயிறு: காலை 8 மணி
DAY CLASS: காலை 8 மணி
குறிப்பிட்ட திகதிக்குப் பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
VICKNA Tuition Centre
52, STANLEY ROAD, JAFFNA.

# மலையகத்தில் தமிழ் இளைஞர் கைதாவது நிறுத்தம்

கொழும்பு, பெப். 26 மலையகத்தில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதை உடனடியாக (இடை) நிறுத்தும்படி மேலிடம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிகின்றது.

இது பற்றி விசாரித்த போது உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

அண்மையில் நடந்து முடிந்த வன்செயல்கள் தொடர்பாக மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்து வந்தது.

இதைத்தொடர்ந்து மலையகப் பகுதிகளில் பதற்ற நிலை உருவானது. இப்போது கைது செய்வதை இடைநிறுத்தி வைக்கும்படி பொலிஸுக்கு மேலிடம் உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். விசாரணை செய்யப்படுகின்றனர். நிரபராதிகள் என்று காணப்படுபவர்கள் விடுதலைசெய்யப்படுகின்றார்கள்–

இப்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறின.

## இரண்டாவது நினைவஞ்சலி



செல்வி ஜமுனுளினி (நிலா) பரமானந்தம்

திதி: 26 - 02 - 86

உமது பிரிவால் வாடும்,

அம்மா, அக்கா, மாலா, அத்தான் யோகேஸ்வரன், ஜம்பா, அண்ணு நந்தகுமார், கண்ணன், ரேசன், ராசு.

'மிதிலை',
கெருடாவில்,
தொண்டைமாளுறு.

## நீத்தார் பட்டியல்

### திரு. சி. மு. அப்புத்துரை

இந்துப்போட் முன்னுள் கணக்காளரும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை முன்னுள் முகாமையாளருமான திரு.சி. மு. அப்புத்துரை அவர்கள் காலமானுர்.

அன்னுர் காலஞ்சென்ற தமிழ்க் கந்தையா உபாத்தியாயரின் மருகரும் சேதுநாயகியின் கணவரும், தற்பரானந்தன் (அதிபர்) நித்தியானந்தன் (நில அளவையாளர்-கல்கமுவ),சர்வானந்தன் (காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை) குலகுணேஸ்வரி, குலகுணராணி,குலகுணசக்தி (சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்), தேவானந்தன் (பொறியியல் மாணவன் லுமும்பா பல்கலைக்கழகம் ருஷியா) ஆகியோரின் தந்தையும், கந்தையா (பொதுநூலகம்,யாழ்ப்பாணம்),நகுலாம்பிகா தேவி (ஆசிரியை,நகுலேஸ்வரா மகாவித்தியாலயம், கீரிமலை) ஆகியோரின் மாமனுரும் குமுதினி, ஜபாலினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னுரின் இறுதிக்கிரியைகள் 26.02.86 புதன்கிழமை பிற்பகல் 2மணி 30 நிமிடமளவில் அன்னுரது இல்லத்தில் நடைபெற்று, சங்கம்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கந்தரோடை,
சுன்னுகம்.

## இன்று

யாழ்ப்பாணம், பெப். 26 நெல்லை க. பேரன் எழுதிய 'விமானங்கள் மீண்டும் வரும்' குறு நாவல் அறிமுகவிழா இன்று பிற்பகல் 2 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கைலாசபதி கலையரங்கில் தமிழ் மன்றத் தலைவர் செல்வன் சு. மணிவண்ணன் தலைமையில் நடைபெறும்.

செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார். யாழ் றெலிகுளோப் அதிபர் திரு ம சிவராசா முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி சி. மெளனகுரு, கலாநிதி சோ. கிருஷ்ணராசா ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

தமிழ் மன்றச் செயலாளர் செல்வன் செ. சக்திதரன் நன்றி கூறுவார்.

* *

நல்லூர், பெப். 26 நீர்வேலி அச்செழு சைவநெறிக் கழகமும், நீர்வேலி ஞேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் இணைந்து நடத்தும் திருவள்ளுவர் தினவிழா இன்று பகல் 2 மணிக்கு நீர்வேலி ஞே. க. த. கலவன் பாடசாலையில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. த. மயில்வாகனம் இவ் விழாவிற்கு தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக 'சிவதர்மவள்ளல்' திரு. க. கனகராசா கலந்து கொள்கிறார்.

கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார், பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம், திரு. க. இராசதுரை, திரு. செ. சின்னத்தம்பி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

தைமாதம் நடைபெற்ற திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பிரதம விருந்தினர் திரு. க கனகராசா பரிசில்களை வழங்குவார்.

தங்கவேலாயுதபுரப் படுகொலை

## படை அதிகாரிகள் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதா?

### பொதுமக்கள் நிலைபற்றி இன்று ஆராய்வு

கொழும்பு பெப்.26 தங்கவேலாயுதபுரம் படுகொலை சம்பந்தமாக விசாரணை நடத்த அரசு நியமித்த மூன்று ஆயுதப் படை அதிகாரிகள் குழுவின் முன்னுல் பொது மக்கள் சாட்சியமளிப்பதா? இல்லையா?

இது பற்றி முடிவு செய்ய, மட்டக்களப்பு அக்கரைப்பற்று பிரஜைகள் குழுக்கள் இன்று (புதன்கிழமை) விசேட கூட்டங்களை நடத்துகின்றன.

### தமிழருக்கு . . .

செய்திருக்கிறது.

இதேவேளை தீவிரவாத இயக்கங்களுக்கு ஆயுதம் வழங்கும் இடங்களுக்கும் நெருக்கடி ஏற்படுத்த எமது இயக்கம் தீர்மானித்துள்ளது.

இப்படி அவர் தெரிவித்தார்.

## மார்க்கோஸ் தப்பி ஓட்டம் . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு வைபவங்களில் பிலிப்பீன்ஸ் ஜனுதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்திருந்தனர்.

திரு. மார்க்கோஸின் பதவிப் பிரமாணத்தை பிரதம நீதியரசர் நடத்தி வைத்தார்.

திருமதி அக்கியுனேவின் பதவிப்பிரமாணத்தை உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் நடத்தி வைத்தார்.

திரு. மார்க்கோஸின் பதவிப் பிரமாணத்தை தொலைக்காட்சியில் அஞ்சல் செய்ய மறுக்கப்பட்டது.

அரசாங்கத் தொலைக்காட்சி, வானெலி நிலையங்களை நேற்று திங்கட்கிழமையே திருமதி. அக்கியுனேவுக்குச் சார்பான கிளர்ச்சிப்படைகள் கைப்பற்றி இருந்தன.

பாதுகாப்பு அமைச்சர் திரு. பொன்ஸ் என்ட்றேலி, திரு. மார்க்கோஸுடன் தொலைபேசியில் பேசிய போது, தாம் உயிருடன் பாதுகாப்பாகத் தப்புவதற்கு வசதி செய்தால் பதவியில் இருந்து ராஜினுமாச் செய்வதாகக் கூறியிருந்தாராம்.

அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் தமக்கே வெற்றி கிடைத்ததாக அடம்பிடித்த திரு. மார்க்கோஸ் பதவியிலிருந்து இறங்க இணங்கியது பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

திரு. மார்க்கோஸ் மாளிகையில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்துக்கு பாதுகாப்பாகப் போய்ச் சேர்ந்தார்.

அங்கிருந்து அவர் அமெரிக்காவுக்கு இந்தோனேஷிய நேரப்படி இரவு 9-05 மணிக்கு அதாவது இலங்கை நேரப்படி மாலை 6-35 மணிக்கு) தப்பிச் சென்ருர்.

திரு. மார்க்கோஸ் அரசமாளிகையைவிட்டு வெளியேறியதும் அங்கு காவலுக்கு நின்ற அரசாங்கப் படையினர் "பிரச்சினை முடிந்து விட்டது" என்று கூறி அங்கு திரண்ட அக்கியுனே ஆதரவாளர்களிடம் தெரிவித்தார்கள்.

திருமதி அக்கியுனே அதன் பின்னர் அரசமாளிகைக்குச் சென்று மக்கள் மத்தியில் உரை நிகழ்த்திஞர்.

திரு. சல்விடோ லோறல் உதவி ஜனுதிபதியாகவும், பிரதமராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பொன்ஸ் என்ட்றேலி பாதுகாப்பு அமைச்சராகவும், ஆயுதப்படைகளின் ஜெனரலாக பிடல் றமோஷும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மார்க்கோஸ் பதவி இறங்கிய செய்தி கேட்டு மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் வீதிகளில் ஆடிப் பாடி மகிழ்ந்தனர்.

## மன்னர் . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

ஆலயச் சுவர்களில் குண்டுகள் பாய்ந்த அடையாளங்கள் காணப்படுவதாக அறியப்படுகிறது.

உப்புக்குளம், பள்ளிமுனைப்பகுதியில் உள்ள பல வீடுகள் சேதம் அடைந்ததுடன் அப்பகுதி மக்கள் பீதியுடன் பாதுகாப்பான இடத்தை தேடிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக புலிகள் இயக்கம் சென்னையில் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;–

மன்னர் தாக்குதலில் ஒரு இராணுவ சார்ஜண்ட் உட்பட 10 பேர் சம்பவம் நடந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

படுகாயம் அடைந்த லெப்டினன்ட் எச். டபிள்யூ. சில்வா அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மரணமானுர்.

போராளிகள் தரப்பில் எந்தவித இழப்பும் இல்லை— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய சம்பவத்தால் மன்னர் நகரம் பதறி அடங்கியது. அங்கு மயான அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நகராட்சி . ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுயேச்சை —04

ஊராட்சி மன்றத் தேர்தல்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. நேற்று இரவு கிடைத்த முடிவுகளின் படி ஒவ்வொரு கட்சியும் முன்னணியில் நிற்கும் ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | |
|---|---|
| அ. தி. மு. க. | —134 |
| இந்திரா காங்கிரஸ் | — 72 |
| தி. மு. க. | —136 |
| இந்திய கம்யூ. | — 06 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூ | — 07 |
| போர்வேட்புளக் | — 03 |
| ஜனதா | — 03 |
| சுயேச்சையாளர்கள் | —18 |

## மலையகத்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகம் செய்தனர்.

அச்சமயம் 3 வயது ஆண் குழந்தை ஒன்று துப்பாக்கிச்சூடு தாக்கி இறந்தது. மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளி ஒருவரின் மகனே இக் குழந்தை. ஆறு தமிழ்த் தோட்டத் தொழிலாளரும் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 5,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: [illegible] உதயன் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 [illegible] வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 26-02-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டரங்கு

★ இன்று

## பெண்கள் ஹொக்கி யாழ்நகரில் முதல்தடவையாக

### இந்து மகளிர், பல்கலைக்கழக வீராங்கனைகள் மோதல்

— விளையாட்டுச் செய்தியாளர்;— சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், பெப், 26 யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத்துறை வரலாற்றில் பெண்கள் ஹொக்கி மோதல் இன்று முதல் தடவையாக நடைபெறுகிறது.

யாழ் பல்கலைக் கழக வீராங்கனைகளும், யாழ் இந்து மகளிர் கல்லூரி வீராங்கனைகளும் இன்று ஹொக்கி ஆட்டத்தில் மோதுகின்ருர்கள்.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 4. 00 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக பெண்கள் அணி 1982 ஆம் ஆண்டு முதல் தடவையாக கொழும்பில் ஹொக்கிப் போட்டிகளில் கலந்து கொண்டிருந்தது.

அப்போது நடைபெற்ற பல்கலைக்கழக அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண வீராங்கனைகள் இரண்டாவது இடத்தைப் பெற்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஹொக்கி ரசிகர்களுக்கு இன்றைய ஆட்டம் ரசனைக்கு விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவது டெஸ்ட்

## தடுமாறும் இலங்கைக்கு சீரற்ற காலநிலை கைகொடுத்தது

கண்டி, பெப். 26 தடுமாறும் இலங்கை அணிக்கு சீரற்ற காலநிலை கைகொடுத்தது.

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் மூன்ரும் நாள் ஆட்டத்தில் இலங்கை வீரர்களின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தபோது சீரற்ற காலநிலை கைகொடுத்தது. அதனுல் நேற்றைய ஆட்டத்தின் பெரும்பகுதி நேரம் விளையாட முடியாமல் ஆட்டம் கைவிடப்பட்டபோது இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புடன் தப்பிக் கொண்டது.

நேற்றைய ஆட்டம் நண்பகல் 12-45 மணிக்கே ஆரம்பமானது. எனினும் 70 நிமிடங்கள் விளையாடிய பின்னர் மதியம் 1-55 மணிக்கு ஆட்டம் முற்ருக கைவிடப்பட்டது. சீரற்ற காலநிலையே ஆட்டம் கைவிடப்பட்டதற்கு காரணமாகும்.

இந்த 70 நிமிட நேரத்தினுள் இலங்கை தனது தொடக்க துடுப்பாட்ட வீரர்கள் இருவரினதும் விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்தது.

விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களுடன் தனது இன்றைய ஆட்டத்தைத் தொடங்கிய இலங்கை அணி 18 ஓட்டங்களைப் பெற்றபோது வெத்தமுனியின் விக்கெட்டை முதலாவதாக இழந்தது. அவர் பெற்ற ஓட்டங்கள் 08.

இலங்கை மேலும் ஒரு ஓட்டத்தைச் சேர்த்த போது ரவி ரட்னுயக்கா ஆட்டமிழந்தார். அவர் மொத்தமாகச் சேர்த்த ஓட்டங்கள் 07.

நேற்று ஆட்டம் கைவிடப்பட்டபோது இலங்கை அணி 2 விக்கெட் இழப்புக்கு 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முதல் இரண்டு நாள் ஆட்டத்தின்போது இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 109 ஓட்டங்களையும் பாகிஸ்தான் 230 ஓட்டங்களையும் பெற்றன என்பது தெரிந்ததே.

## யாழ்ப்பாணக் கல்லூரி திறமையை நிரூபித்தது

### சென். ஜோன்ஸ் கல்லூரி அணி துவண்டது

யாழ்ப்பாணம், பெப். 26 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியையை வென்று யாழ்ப்பாணத்தில் சிறந்த அணிகளுள் ஒன்று என்று நிரூபித்தது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 48 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது

ஏ. கணேஸ்பஞ்சன் 36 ஓட்டங்களையும், பி. பார்த்திபன் 20 ஓட்டங்களையும், ஏ. வாக்சன் 19 ஓட்டங்களையும், எம். நிகால் ஆட்டம் இழக்காமல் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ். அகஸ்ரின், ஜி. ராகவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் ஜேசுராஜா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி, 48.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப்பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

ஜேசுராஜா, ராகவன் ஆகியோர் முறையே 30, 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே. அகிலன், எம். நிகால் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் பி. பார்த்திபன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## இணைப்பு 'சி' யை அடிப்படையாக வைத்தே பேச்சுத் தொடங்க வேண்டும்

### இந்திய நிலை இதுவாம்

புதுடில்லி,பெப்.26 இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு 'இணைப்பு சி' யை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும். அதுவே இந்தியாவின் விருப்பம்.

'இந்து' நாளிதழில் பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி.கே. ரெட்டி இப்படி எழுதியிருக்கிறார்.

அவர் தமது செய்திக் கட்டுரையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

தினசரி இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றார்கள். இ[illegible] இந்[illegible] தற்போது உயர்மட்ட[illegible]யில் இலங்கையுடன் தொடர்பு கொள்ள முயற்சித்து வருகிறது.

இம்முயற்சிகள் சரிவராது போனுல் இந்தியா மிகவும் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க இருப்பதாகத் தெரிகிறது.

இக்கடுமையான போக்கு பிரதமர் ராஜீவ் காந்தி, வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத் மூலம் இந்திய நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தப்படும்.

இலங்கை நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை தொடக்கி வைத்து திரு. ஜெயவர்த்தன பேசிய பேச்சை இந்தியா முக்கிய கவனத்துக்கு எடுத்துள்ளது.

1985 ஆகஸ்ட் 30 இல் புதுடில்லியில் வைத்து திரு. பண்டாரியும் டாக்டர் எச். டபிள்யு ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்ட நகல் திட்ட யோசனைகளின் அடிப்படையில் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று திரு. ஜெயவர்த்தன தமது நாடாளுமன்றத் தொடக்க உரையில் கூறியிருந்தார்.

டில்லியில் தயாரிக்கப்பட்டது இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையேயான விஷயம்.

இந்த யோசனைகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் விடுதலைப் போராளிகள் அமைப்புக்களுக்கும் எதுவித தொடர்பும் கிடையா.

இந்த நகல் திட்ட யோசனைகள் திட்டவட்டமான ஒரு தீர்வும் அல்ல.

இரு தரப்பினரும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஒரு அடிப்படைத் திட்டம்தான் இந்த நகல் செயல் திட்ட யோசனைகள்.

இரு தரப்பினரையும் எப்படிப் பேச்சுக்கு அழைப்பது என்பது பற்றி பிரதமர் ராஜீவ் காந்தி தான் முடிவு செய்ய வேண்டும்.

'இணைப்பு சி'யை அடிப்படையாகக் கொண்டே பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்று இந்திய வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

## இன்றும் நடைபெறும்

சுண்டுக்குளி,பெப்,26 யாழ் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றம் நடத்திவரும் அபிவிருத்தி கண்காட்சி இன்றும் நடைபெறும்.